**(சுருக்கம்)**

படிகள் – அகவிலைப்படி – 01.07.2022 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் – ஆணை – வெளியிடப்படுகிறது.

**(செயலகக் கிளை)**

**(நிலை) முழு வாரிய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக செயல்முறை ஆணை எண்.20 நாள்: 23.09.2022.**

புரட்டாசி –6–ம் நாள்,
சுபகிருது வருடம்;
திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டது:

1. (நிலை) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்/ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண்.06, நாள்:12.01.2022.
2. அரசாணை (எழுத்துத் தொடர்) எண்.254, நிதி (படிகள்)த் துறை, நாள்:18.08.2022

**செயல்முறைகள்:**

பார்வை 1–ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக செயல்முறை ஆணையில் வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு திருத்தப்பட்ட அகவிலைப்படி கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.01.2022 | அடிப்படை ஊதியத்தில் 31 சதவீதம் |

2. பார்வை 2–ல் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு ஆணையில், 01.07.2022 முதற்கொண்டு மாநில அரசு பணியாளர்களுக்கு கீழ்கண்ட திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது:-

| வ. எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.07.2022 | அடிப்படை ஊதியத்தில் 34 சதவீதம் |

மேற்படி உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 01.07.2022 முதற்கொண்டு வழங்கப்படும் என்றும், 01.01.2022 முதல் 30.06.2022 வரையிலான காலத்திற்க்கு 31% அகவிலைப்படியே தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

**3.** தமிழ்நாடு அரசின் மேற்காணும் ஆணையைப் பின்பற்றி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், அதன் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அகவிலைப்படியைக் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஆணையிடுகிறது:-

| வ.எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.07.2022 | அடிப்படை ஊதியத்தில் 34 சதவீதம் |

4. மேற்கண்ட உயர்த்தப்பட்ட வீதத்திலான அகவிலைப்படியானது, 01.07.2022 முதல் 30.08.2022 வரை கணக்கிடப்பட்டு இரண்டு மாதத்திற்கான (ஜீலை முதல் ஆகஸ்ட் வரை) நிலுவைத்தொகை உடன் வழங்கப்படும். மேலும், செப்டம்பர் 2022 மாதத்திற்கான உயர்த்தப்பட்ட அகவிலைப்படி இம்மாதத்தின் ஊதியத்துடன் இணைத்து அக்டோபர் மாதம் பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னணு தீர்வு சேவை (ECS) மூலம் வழங்கப்படும்.

5. அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிட அடிப்படை ஊதியத்துடன் தனிப்பட்ட ஊதியத்தையும் (Personal Pay) சேர்த்துக்கொள்ள வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில், ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அதாவது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின், அதனை அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அதனைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

6. மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் மற்றும் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் ரூ.4,100 – 12,500 பெறும் பணியாளர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும்.

7. இவ்வாணை பெறப்பட்டமைக்கான ஒப்புகையை உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

**(வாரியத்தின் ஆணைப்படி)**

**ஆ.மணிக்கண்ணன்**
**செயலர்**

பெறுநர்

அனைத்து தலைமைப் பொறியாளர்கள்.
தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்/பொது/வருவாய்.
தலைமை உட்தணிக்கை அலுவலர்/தணிக்கைக் கிளை.
அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்.
அனைத்து துணைச் செயலாளர்கள், செயலகக்கிளை.
தன்னகத் தணிக்கை அலுவலர் (மாநில கணக்கு துறைத் தலைவர்).
அனைத்துக் கிளைகள் (தலைமையிடம்).

**நகல்:–**

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் பார்வைக்கு.
காவல் துறை இயக்குநர்/விழிப்புப்பணி
மேலாண்மை இயக்குநர்/தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்.
அனைத்து இயக்குநர்கள்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.

செயலர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்/சென்னை–2.
சட்ட ஆலோசகர்/ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
நிறுவன செயலாளர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.
நேர்முக உதவியாளர்/தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அலுவலகம்.
துணைத் தலைமைப் பொறியாளர்/நிர்வாகக் கிளை.
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்கள்/நிர்வாகக் கிளை.
தொழில் உறவு ஆலோசகர்.
இயக்குநர்/தமிழ்நாடு மின்வாரிய பதிப்பகம்.
இயக்குநர்/கணினி மையம்.
தலைமை மருத்துவ அலுவலர், தலைமையிட மருந்தகம்.
தொழில் உறவு அலுவலர்.
அனைத்து அலுவலர்கள், பிரிவுகள்/செயலகக்கிளை.
தலைமை மக்கள் தொடர்பு அலுவலர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
உறைவிட மேலாளர்/புதுதில்லி.
உதவி பணித்தொகுதி அலுவலர்/தமிழ் வளர்ச்சி/த.நா.மி.வா. இதழில் பிரசுரிப்பதற்காக.
டி.என்.எப்.சி – டவர் எண்.490/3–4, அண்ணா சாலை, நந்தனம், சென்னை–35
தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, ஈ.வி.கே.சம்பத் மாளிகை, 5 வது மாடி,
கல்லூரி சாலை, சென்னை–6.
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 4வது தளம், சிட்கோ நிறுவன அலுவலக கட்டிடம், திரு.வி.க தொழிற்பேட்டை, கிண்டி , சென்னை–600 032.
தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்.
தமிழ்நாடு மின்வாரிய கணக்காயர் மற்றும் களத்தொழிலாளர் சங்கம்.
தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு.
மின்சாரப் பிரிவு அண்ணா தொழிற் சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்.
தமிழ்நாடு தேசிய மின் தொழிலாளர் சம்மேளனம் (இரண்டு பிரிவுகள்)
தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்கம்.
தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ்.
தமிழ்நாடு மின்வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய பொறியாளர் கழகம்.
தமிழ்நாடு மின் வரிய நிதி மற்றும் கணக்கு அலுவலர் சங்கம்.
பாரதீய மின் தொழிலாளர் சம்மேளனம்.
தமிழ்நாடு மின் வாரிய கார்டு பில்லிங் ஸ்டாப் சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய டாக்டர் அம்பேத்கார் எம்ப்ளாயீஸ் யூனியன்.
தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் யூனியன்.
தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்.
தமிழ்நாடு மின்சார வாரிய பாட்டாளி தொழிற் சங்கம்.

**//உண்மை நகல் // உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//**

A. Jayeeth

**பிரிவு அலுவலர்**